**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>**

## RLTOP. No. 2/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.S.சரவணன், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 20.10.2022**

**பெயர் - பாலசுந்தரம்**

**த/பெ - பெங்கையா**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11:37 A.M**

**<u>குறுக்கு விசாரணை</u> -**

1. இந்த மனு எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் வீட்டை காலி செய்ய தாக்கல் செய்தேன். மனுவில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிர்மனுதாரர் எனது மகன் என்றால் சரிதான். எனக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 1 மகள் மற்றும் 2 மகன்கள். எனது மகன் பாலாஜி என்னுடன் உள்ளார். மற்றொரு மகனான கோபி மீஞ்சூரில் வசிக்கிறார். மேற்படி பாலாஜிக்கு திருமணம் ஆகி குடும்பத்துடன் வசிக்கிறாரா என்றால் ஆமாம் என்னுடைய மற்றொரு மகன் எதிர்மனுதாரர் மோகன் பாபுவா என்றால் ஆமாம்.

2. எதிர்மனுதாரர் மோகன்பாபு மாற்றுதிறனாளி என்றால் சரிதான். மேற்படி நபர் வங்கி ஏ.டி.எம்ல் காவலாளிய பணி செய்து வந்தார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. எதிர்மனுதாரர் பிறந்ததிலிருந்து என்னுடன்தான் வசிக்கிறாரா என்றால் திருமணம் ஆன பிறகு அவர் தனி குடுத்தனம் சென்றால். எதிர்மனுதாரர் மனுசொத்தில் எவ்வளவு காலமாக வசிக்கிறார் என்றால் 6 மாத காலமாகவே வசிக்கிறார். எதிர்மனுதாரர் பராமறிப்பு தொகை கொடுக்க நான் அவரை கேட்டேனா என்றால் கேட்டேன் அவரால் முடியவில்லை என்று அவர்

கூறியதால் கேட்பதை விட்டுவிட்டேன் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வாடகைதாரர் என்று நான் கூறும் நிலையில் எழுத்துமூலமான வாடகை ஒப்பந்தம் ஏதேனும் என்னுடம் உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வாடகை கொடுப்பதற்கு நான் ரசீது கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை.

3. எதிர்மனுதாரர் வாடகைதாரர் என நிருப்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. மனுசொத்தை எனது பிள்ளைகளான 2 மகன்கள் மற்றும் 1 மகளுக்குதான் நான் சமமாக கொடுப்பேன். மேற்படி சொத்து குறித்து எனது பிள்ளைகளுக்குல் ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எனது அனுமதியுடன்தான் மனுசொத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். அவரை காலி செய்யவேண்டும் எனில் அசல் வழக்கு தாக்கல் செய்யாமல் பொய்யாக வீட்டின் வாடகைதாரர் என எதிர்மனுதாரரை கூறி இம்மனுவினை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மற்றொரு மகனை எனது வீட்டிலிருந்து காலி செய்ய கூறினேனா என்றால் இல்லை. இம்மனுவினை வாடகை சரியாக தரவில்லை என்று கூறி அதன் அடிப்படையில் எதிர்மனுதாரர் காலி செய்யவேண்டி மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிலும் எதிர்மனுதாரர் வாடகை சரியாக கொடுக்கவில்லை என்று கூறியே அனுப்பியுள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4.புதிதாக இயற்றப்பட்ட வாடகை ஒப்பந்த சட்டத்தின் கீழ் எழுத்துபூர்வமான மற்றும் முறையாக அதிகாரியிடம் பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் இருந்தால் மட்டுமே அச்சட்டத்தின் கீழ் மனுதாக்கல் செய்யும் இயலும் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் வாடகை ஒப்பந்தம் போடவேண்டும் என்று கூறி அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றும் அந்த காரணத்திற்காக இம்மனுவினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 11:52 A.M**